DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 32/2024**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | குகன் | Caste: | |
| Father's Name: | காளிமுத்தன் | Calling: | |
| Village: | மேலப்பெருங்கரை | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 21 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 02.02.2026

( எதிரி ஆஜர்.)

<u>**முதன்மை விசாரணை**</u>

நான் பரமக்குடி தாலுகா மேலப்பெருங்கரை கிராமத்தில் வசித்து வருகிறேன். எதிரியை தெரியாது. அ.சா.1 பாலகிருஷ்ணனை தெரியாது. சாட்சிகள் முத்துமணி, காளிதாஸ் ஆகியோர்களை தெரியும். அ.சா.1 மற்றும் எதிரி என்ன சமூகத்தை சேர்ந்தவர்கள் என்று தெரியாது. அ.சா.1 பாலகிருஷ்ணன் கொடுத்த புகார் சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மேற்சொன்ன சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

போலிஸ் விசாரணையில் கடந்த 10.07.2024 ம் தேதி காலை சுமார் 8.00 மணியளவில் காந்தி நகர் கோவிலுக்கு முத்துமணி என்பவர் வசூல் செய்வதற்காக சென்றிருந்தார். முத்துமணியை நான் செல்போனில்

தொடர்பு கொண்டபோது அவரது போன் சுவிட்ச் ஆப் என வந்ததால் நான் பதறி கையில் கேஷ் வைத்திருப்பாரே எதுவும் பிரச்சனை ஆகிவிட்டதோ என்று யோசித்து நானும் என்னுடன் வசூல் செய்யும் காளிதாஸ்-ம் அவர் இருக்கும் காந்தி நகர் ஏரியாவுக்கு சென்றோம் என்றும் காந்திநகரில் உள்ள மகளிர் குழு தலைவி பாண்டியம்மாள் என்பவர் வீட்டின் முன்பு சென்று பார்த்தபோது முத்துமணி அங்கு இருந்தார் என்றும் அவரிடம் வசூல் முடிந்துவிட்டதா என கேட்டேன் என்றும் அதற்கு அவர் குழுவில் உள்ள சிலர் காசு தரவேண்டியது உள்ளது மாலையில் வந்து வாங்கிக்கொள்ளுங்கள் என்று பாண்டியம்மாள் கூறுவதாக கூறினார் என்றும் நாங்கள் மீண்டும் பாண்டியம்மாளிடம் கேட்க அவர் வசூல் செய்து மொத்தமாக சாயங்காலம் தருகிறேன் என்று கூறினார் என்றும் பின்பு சாயங்காலம் சென்று பாண்டியம்மாளிடம் பணத்தை கேட்டபோது பாலகிருஷ்ணன் மனைவி ராக்கு என்பவர் மட்டும் மாலையில் தருவதாக கூறியவர் இன்னும் தரவில்லை என்றும் நாங்கள் பாண்டியம்மாளிடம் அவரது வீட்டை காட்டுமாறு கூறினோம் என்றும் அப்போது பாண்டியம்மாள் ராக்கு வீட்டுக்கு எங்களை அழைத்து சென்றார் என்றும் நாங்கள் சென்றபோது ராக்கு வீடு சாத்தியிருந்தது என்றும் நாங்கள் கதவை தட்டினோம் என்றும் சத்தம் கேட்டு வீட்டில் இருந்து ராக்கின் கணவர் பாலகிருஷ்ணன் வெளியில் வந்தார் என்றும் ராக்கு எங்கே என்று கேட்டோம் என்றும் அதற்கு எங்களுக்குள் சண்டை அதனால் மனைவியை அடித்து ஊருக்கு அனுப்பிவிட்டேன் என்று சொன்னார் என்றும் அப்போது பாண்டியம்மாள் பாலகிருஷ்ணனிடம் ராக்கு இன்றைக்கு லோன் காசு கட்டனும் நீங்க கட்டுங்கள் என்று சொன்னார் என்றும் அதற்கு பாலகிருஷ்ணன் பாண்டியம்மாளிடம் என்னை

கேட்காமல் ஏன் என் மனைவிக்கு லோன் வாங்கிக்கொடுத்தாய் என்று ஒருமையில் பேசினார் என்றும் இதில் பாண்டியம்மாளுக்கும் பாலகிருஷ்ணனுக்கும் வாய் தகராறு ஏற்பட்டது என்றும் பின்பு பாலகிருஷ்ணன் பாண்டியம்மாளை கையை பிடித்து தள்ளிவிட்டார் என்றும் அப்போது பாண்டியம்மாளும் பதிலுக்கு பாலகிருஷ்ணனை பிடித்து தள்ளிவிட்டு இருவருக்கும் கைகலப்பு ஆகிவிட்டது என்றும் அங்கிருந்த நாங்கள் சத்தம்போட்டு விலக்கிவிட்டோம் என்றும் கடந்த 13.07.2024 ம் தேதி டிஎஸ்பி விசாரிக்கும்போது கூறிவிட்டு தற்போது எதிரிகளை தெரியாது என்றும் போலிசார் விசாரிக்கவில்லை என்றும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.02 15:05:46 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)